UNIQUE IAS ACADEMY
The Best Coaching Center in Coimbatore
NVN Layout, New Siddhapudur, Gandhipuram, Coimbatore
Ph: 0422 4204182, 98842 67599

***************************************************************************************

**இந்தியாவின் சிறந்த புத்தகத்துக்கான விருது**

- வைரமுத்துவின் கள்ளிக்காட்டு இதிகாசத்தின் இந்தி மொழிபெயர்ப்புக்கு கிடைத்துள்ளது.
- "நாகபானி வன் கா இதிகாஸ்" - இந்திமொழிப்பெயர்ப்பு
- மொழி பெயர்த்தவர்: எச்.பாலசுப்பிரமணியன்
- இந்த விருது இந்திய வர்த்தக கூட்டாண்மை கழகத்தால் வழங்கப்பட்டது.
- வைரமுத்துவின் "கள்ளிக்காட்டு இதிகாசம்" 2003-ஆம் ஆண்டு சாகித்திய அகாடெமி விருது பெற்றது.

**"எம்.டி.நியூ டைமண்ட்" (Mt New Diamond)**

- சென்னை துறைமுகத்துக்கு முதன்முறையாக வரும் மிகப்பெரிய கச்சா எண்ணெய்க் கப்பல் ஆகஸ்டு 31,2018 அன்று சென்னை துறைமுகத்துக்கு வந்துள்ளது

**நீதிபதி தருண் அகர்வால் குழு**

- ஸ்டெர்லைட் ஆலையில் ஆய்வு செய்ய உள்ள குழு
- இவர் மேகாலயாவின் முன்னாள் தலைமை நீதிபதி

**www.plasticpollutionfreetn.org, Plastic Pollution Free Tamil Nadu:**

- 'பிளாஸ்டிக் மாசில்லா தமிழ்நாடு" உருவாக்கிட மாநில அளவிலான பிரச்சாரத்தை துவக்கி வைக்கும் விதமாக முறையே வலைத்தளம் மற்றும் செயலியை தமிழக முதல்வர் அறிமுகப்படுத்தினார்.
- இதன் தூதுவர்களாக விவேக், சூர்யா, கார்த்திக், ஜோதிகா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**சிறப்பு முதலீட்டுப் பகுதி: (Special Investment Region)**

- கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சிறப்பு முதலீட்டுப் பகுதிக்கு ஆகஸ்டு 25-ஆம் தேதி முதல்வர் அடிக்கல் நாட்டினார்

- தேன்கணிக்கோட்டை மற்றும் சூலகிரி தாலுக்காவில் ரூ.2420 கோடி செலவில் TIDCO (Tamilnadu Industrial Development Corporation Ltd) மற்றும் GMR Infrastructure ltd ஆகியவற்றால் உருவாக்கப்படவுள்ளது.

**தமிழகத்தில் மாநிலப் பேரிடர் மேலாண்மை ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது.**

- இது தேசியப் பேரிடர் மேலாண்மைச்சட்டம் 2005-ன் கீழ் அமைக்கப்பட்டுள்ளது.
- இவ்வாணையத்தின் தலைவர் தமிழக முதல்வர்.

**சீனாவில் நடைபெற்ற ஆட்டோமேஷன் போட்டியில் வி.ஐ.டி மாணவர்கள் முதலிடம்**

- சர்வதேச உணவுப் பதப்படுத்துதல் தொழில்நுட்ப மாநாடு (International Conference on Recent Advances in food Processing Technology ICRAFPT)
- தஞ்சாவூரில் அமைந்துள்ள இந்திய உணவுப் பதப்படுத்துதல் தொழில்நுட்ப நிறவனத்தில் 17.08.2018 அன்று நடைபெற்றது.

**விஐடி மாணவர்கள் முதலிடம்**

- சீனாவில் நடைபெற்ற உயர்கல்வி நிறுவனங்களுக்கான சர்வதேச அளவிலான டெல்டா ஆட்டோமேஷன் போட்டியில் விஐடி மாணவர்கள் முதலிடம்.

**சீமா அகர்வால் குழு**

- பெண் போலீஸ் மற்றும் அரசு பெண் ஊழியர்களுக்கு எதிராக பாலியல் குற்றங்கள் தொடர்பாக விசாரணை நடத்த கூடுதல் டி.ஜி.பி சீமா அகர்வால் தலைமையில் கமிட்டி அமைக்கப்பட்டு உள்ளது.

**ஆளுநர் பன்வாரிலால் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்**

- சுதந்திர தினத்தின்போது ஆளுநர் மாளிகையில் முதல் முறையாக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்
- சுதந்திர தினத்தின் போது தமிழக ஆளுநர் மாளிகையில் தேசியக் கொடியேற்றும் மரபு இதுவரை இருந்தது இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**சென்னைக்கு 14-வது இடம்**

- கவலையின்றி மக்கள் வசிக்கும் நகரங்களில் சென்னைக்கு 14-வது இடம் கிடைத்துள்ளது.

**வி.கே.தஹில் ரமணி**

❖ சென்னை உயர் நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள வி.கே.தஹில் ரமணி 12.08.2018 அன்று பதவியேற்றார்.

**"happiy.com" இணையதளம்**

❖ திருப்பூர் மாவட்டத்தில் விவசாயிகளே ஒருங்கிணைந்து தங்களின் விளை பொருட்களை நேரடியாக விற்பனை செய்யும் வகையில் "happiy.com" இணையதளத்தை உருவாக்கி உள்ளனர்.

**சிற்பி இலக்கிய விருது**

❖ "சிற்பி இலக்கிய விருது – 2018" கவிஞர் மகுடேசுவரனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**தமிழக முன்னாள் முதல்வர் கருணாநிதியின் பெயரில் தமிழ் இருக்கை**

❖ தமிழக முன்னாள் முதல்வர் கருணாநிதியின் பெயரில் புதுவை மத்திய பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைக்கப்படும் என்று புதுச்சேரி மாநில முதல்வர் வே.நாராயணசாமி அறிவித்துள்ளார்.

**முதலீட்டுக்கு உகந்த மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாடு 2-ம் இடம்**

❖ முதலீட்டுக்கு உகந்த மாநிலங்களின் பட்டியல் 2018 (N-SIPI – NCAER State Investment potential Index)-ல் புது தில்லி முதலிடத்தையும் தமிழ்நாடு இரண்டாமிடத்தையும் பெற்றுள்ளது.

**வாணியம்பாடி அருகே நடுகற்கள் கண்டுபிடிப்பு**

❖ வாணியம்பாடி அருகே சங்க இலங்கியங்களில் குறிப்பிட்டுள்ள உடன்கட்டை (சதி) ஏறுதல் நிகழ்வை குறிக்கும் நடுகற்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

❖ உடன் கட்டை ஏறிய இக்கல்லை தீப்பாயத்தாள் கல், சதி கல் என்றும் அழைக்கப்படுகிறது.

**தமிழக முன்னாள் ஆளுநர் பீஷ்ம நாராயண்சிங் காலமானார்:**

❖ 1991-ஆம் ஆண்டு தமிழகத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டார். தொடர்ந்து 3 ஆண்டுகள் 1993 வரை தமிழகத்தின் ஆளுநராக இருந்தார்.

**கொடைக்கானல் குறிஞ்சி விழா:**

❖ ஆகஸ்டு 11 முதல் ஒரு மாதம் குறிஞ்சி விழா நடைபெறவுள்ளது.

❖ நீலக்குறிஞ்சி பூக்களின் சிறப்புகளை விளக்கும் வகையில் இவ்விழா நடத்தப்படுகிறது.

### கொல்லிமலையில் 'வவ்வில் ஓரி விழா' தொடக்கம்

❖ தமிழக அரசின் சார்பில் ஆகஸ்டு 2-ஆம் தேதி தொடக்கம்.

### சென்னை கொளப்பாக்கத்தில் "வன மரபியல் மரப்பூங்கா" திறப்பு

❖ தமிழ்நாடு வன ஆராய்ச்சிப் பிரிவின் 100வது ஆண்டு விழாவை ஒட்டி ஆகஸ்டு 16-ஆம் தேதி வண்டலூர் அருகேயுள்ள கொளப்பாக்கத்தில் திறந்து வைக்கப்பட்டது.

### உலக யோகா திருவிழா 2018

❖ மாமல்லபுரத்தில் 3 நாட்கள் நடைபெற்ற உலக யோகா திருவிழா ஆகஸ்டு 25 அன்று தொடங்கியுள்ளது.

❖ இந்தியா, தாய்லாந்து, இலங்கை, சீனா, ஹாங்காங் நாட்டு யோகா கலைஞர்கள் கலந்து கொண்டனர்.

### சொற்குவை திட்டம்:

❖ தமிழ் மொழியிலுள்ள அனைத்துச் சொற்களையும் ஆங்கில இணைச் சொற்களோடு சேகரிக்கும் திட்டத்தின் ஆகும்.

❖ இத்திட்டமானது ஒரு வாரத்தில் தொடங்கப்படும் என திரு.வி.க பிறந்தநாள் விழாவில், தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் க. பாண்டியராஜன் தெரிவித்தார்.

❖ "தமிழ்த்தென்றல்" எனச் சிறப்பிக்கப்படும் திரு.வி.க-வின் 136-வது பிறந்தநாள் சென்னையிலுள்ள தண்டலத்தில் (போரூர்) கொண்டாடப்பட்டது.

### நிதித் துறை செயலாளர் தலைமையில் ஒரு நபர் குழு:

❖ தமிழகத்தில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு 7-வது ஊதியக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்ட போது ஏற்பட்ட முரண்பாடுகளைக் களைய எம்.ஏ. சித்திக் (நிதித் துறை செயலாளர்) தலைமையில் ஒரு நபர் குழு அமைக்கப்பட்டது?

### ஷீலா ஸ்டீபன் முதல் பெண் துணைவேந்தராக நியமிக்கப்பட்டார்:

❖ தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தின் முதல் பெண் துணைவேந்தராக நியமிக்கப்பட்டார்.

❖ இவர் அடுத்த 3 ஆண்டுகளுக்கு அப்பதவியை வகிப்பார்.

❖ இவரின் 70-க்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் தேசிய மற்றும் சர்வதேச இதழ்களில் வெளியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## நல் ஆளுமை விருது 2018:

- ❖ சுதந்திர தின விருது(2018) வழங்கும் விழாவில் தமிழக அரசின் நல் ஆளுமை விருது பதிவுத்துறை, சுகாதாரத்துறை, உணவுத்துறை அகிய துறைகளுக்கு வழங்கப்பட்டது.

## 172 வது சட்டப்பிரிவில் திருத்தம் செய்ய மத்திய அரசுக்கு பரிந்துரை

- ❖ ஒரே நாடு, ஒரே தேர்தல் நடைமுறைக்கு மத்திய சட்ட ஆணையம் மத்திய அரசுக்கு பரிந்துரைத்துள்ளது. இதன்படி ஒரே நாடு ஒரே தேர்தல் நடைமுறைப்படுத்த சட்ட பிரிவில் 172-ல் திருத்தம் செய்ய வேண்டும் .
- ❖ ஜம்மு காஷ்மீர் மாநிலத்தை தவிர மற்ற மாநில சட்டசபைகளுக்கும் மக்களவைக்கும் ஒரே தேர்தல் நடத்தலாம்.

## வோடோபோன் ஐடியா லிமிடெடு

- ❖ வோடோபோன் -ஐடியா இணைப்பு நிறைவு பெற்றுள்ளதால் நாட்டின் மிகப்பெரிய தொலைதொடர்பு நிறுவனமாக மாறியுள்ளது.

## ஸ்மார்ட் இந்தியா ஹேகத்தான் 2019

- ❖ உலகின் மிகப்பெரிய நவீன கண்டுபிடிப்பு முயற்சிப் போட்டியான 3- வது "ஸ்மார்ட் இந்தியா ஹேகத்தான் 2019" போட்டியை மத்திய மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.பிரகாஷ் ஜவ்டேகர் 29.08.2018 அன்று புதுதில்லியில் துவக்கிவைத்தார்.

## நான்காவது சர்வதேச ஆயுர்வேதா மாநாடு

- ❖ நான்காவது சர்வதேச ஆயுர்வேதா மாநாடு 1-4 செப்டம்பர் 2018 தினங்களில் நெதர்லாந்தில் நடைபெற்றது.

## சர்வதேச நீர் ஓவியம் தீட்டும் திருவிழா

- ❖ 5 நாள் "சர்வதேச நீர் ஓவியம் தீட்டும் திருவிழா" 23-27 ஆகஸ்டு 2018 தினங்களில் ஜார்கண்ட் மாநிலம் ராஞ்சி நகரில்.

## K.விஜய் ராகவன் தலைமையில் குழு

- ❖ பிரதம மந்திரியின் அறிவியல், தொழில்நுட்பம், கண்டுபிடிப்புகளுக்கான ஆலோசனைக் குழு" (PM-STIAC (Science, Technology, Innovation advisory Committee)) இந்திய அரசின் முதன்மை அறிவியல் ஆலோசகர் மு.விஜய் ராகவன் தலைமையில் 21 உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

**"அம்ருத்"**

❖ "அம்ருத்" (Atal Mission for Rejuvenation and Urban Transformation (AMRUT)) திட்டத்தை நிறைவேற்றியதில் தேசிய அளவில் ஆந்திரப் பிரதேச அரசு முதலிடத்தில் உள்ளதாக தேசிய தர வரிசை அமைப்பு நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

**'Malaria No More' and 'Malaria Elimination Trust'**

❖ ஒடிஷா மாநிலத்தில் மலேரியாவை முற்றிலுமாக ஒழிப்பதற்காக அம்மாநில அரசு 'Malaria No More' and 'Malaria Elimination Trust' எனும் இரண்டு அமெரிக்க நிறுவனங்களுடன் 30.08.2018 அன்று ஒப்பந்தம் செய்துள்ளது.

**அருணாச்சலப்பிரதேச மாவட்டங்களை மறுசீரமைப்பு (திருத்த) மசோதா 2018**

❖ இதன்படி பாக்கி-கெஷாங், லேபா ரடா மற்றும் ஸ்ரீ யொமி எனும் பெயரில் மூன்று புதிய மாவட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் அம்மாநிலத்தின் மொத்த மாவட்டங்களின் எண்ணிக்கையானது 22 லிருந்து 25 ஆக அதிகரித்துள்ளது.

**"நைனி-டூன் ஜன்சதப்தி எக்ஸ்பிரஸ்"**

❖ உத்தரகாண்ட் மாநிலம் கத்கோடாம் - டேராடூன் இரயில் நிலையங்களுக்கிடையேயான புதிய இரயில் சேவையை மத்திய இரயில்வே அமைச்சர் பியூஸ் கோயல் அவர்கள் 25.08.2018 அன்று துவங்கி வைத்தார்.

**சந்தை மதிப்பைத் தாண்டிய இந்திய நிறுவனம்**

❖ ரூ.8 இலட்சம் கோடி சந்தை மதிப்பைத் தாண்டிய முதல் இந்திய நிறுவனம் எனும் பெருமையை 24.08.2018 அன்ற ரிலையன்ஸ் இண்டஸ்டிரீஸ் நிறுவனம் அடைந்துள்ளது.

**பந்தேல் காண்ட் எக்ஸ்பிரஸ் வே**

❖ உத்திரப்பிரதேச மாநிலத்தில் அமைந்த வரும் 'பந்தேல் காண்ட் எக்ஸ்பிரஸ் வே' என்ற 289 கி.மீ நான்கு வழி சாலைக்கு மறைந்த முன்னாள் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் அவர்களின் நினைவாக "அடல் பாத்" எனப் பெயரிடுவதாக அறிவித்துள்ளது

**ஆதித்யா சவுபே நீர் மறுபயன்பாட்டிற்கான ஆராய்ச்சி மையம்**

❖ எனும் பெயரில் கழிவு நீரை மறுசுழற்சி செய்து மறுபடியும் பயனுள்ள நீராக மாற்றுவதற்கான ஆராய்ச்சி மையத்தை காரக்பூர் ஐஐடி அமைத்துள்ளது.

## 11-வது உலக இந்தி மாநாடு

- மொரீசியஸ் நாட்டிலுள்ள போர்ட் லூயிஸ் எனுமிடத்தில் 18-20 ஆகஸ்டு 2018 தினங்களில் நடைபெற்றது. இம்மாநாட்டின் கருத்துரு “இந்தி உலகம் மற்றும் இந்திய கலாச்சாரம்” என்பதாகும்.

## 7 மாநிலங்களுக்கு புதிய ஆளுநர்கள் நியமனம்

- ஜம்மு - காஷ்மீர் சத்யபால் மாலிக்
- பீகார் - லால் ஜி டாண்டன்
- ஹரியாணா – சத்யதேவ் நாராயண்
- திரிபுரா – கப்தான் சிங் சோலங்கி
- உத்தரகாண்ட் - பேபி ராணி மௌர்யா
- மேகாலயா – ததாகதா ராய்
- சிக்கிம் - கங்கா பிரசாத்

## நமது பாதுகாப்பு, நமது உரிமை

- என்ற நோக்கில் குழந்தைகள் மீதான பாலியல் குற்றங்களுக்கெதிரான பரப்புரையை அம்னஸ்டி இண்டர்நேசனல் இந்தியா

## Digital Screens

- “Digital Screens” என்ற பெயரில் இந்திய இரயில்வேயின் பாரம்பரியத்தைப் பற்றிய விழிப்புணர்வு வீடியோ பிரச்சாரத்தை இந்திய இரயில்வே துவங்கியுள்ளது.

## விமான நிலையங்கள் பெயர் மாற்றம்

- உத்தரபிரதேச மாநிலத்தில் பரேலி, கான்பூர், ஆக்ரா ஆகிய விமான நிலையங்களின் பெயர் மாற்றப்பட்டுள்ளது.

  பரேலி – நாத் நாக்ரி விமான நிலையம்

  கான்பூர் - கணேஷ் ஷங்கர் வித்யார்த்தியின் பெயர் வைக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவில் பிறந்த முதல் ஹம்போல்ட் வகை பென்குயின்

- மும்பையில் உள்ள வீரமாதா ஜிஜாபாய் போஸ்லே உதயான் உயிரியல் பூங்காவில் இந்தியாவின் முதல் ஹம்போல்ட் வகை பென்குயின் குட்டி ஆகஸ்டு 15-ஆம் தேதி பிறந்துள்ளது.

### தேசிய வன விலங்குகள் மரபணு வள வங்கி

- தேசிய வன விலங்குகள் மரபணு வள வங்கி என்ற பெயரில் 'அழிவின் நிலையிலுள்ள உயிரினங்களை' பாதுகாப்பதற்கான இந்தியாவின் முதல் ஆய்வு மையம் ஹைதராபாத்தில் மத்திய அமைச்சர் ஹர்ஸ்வர்த்தன் அவர்களால் துவங்கி வைக்கப்பட்டது.

### திறன் மேம்பாட்டிற்கான உரிமை

- இளைஞர்களுக்கு "திறன் மேம்பாட்டிற்கான உரிமையை" வழங்கியுள்ள முதல் இந்திய மாநிலம் என்னும் பெருமையை சட்டிஸ்கர் பெறவுள்ளது.

### குற்றவியல் விதிகள் (திருத்த) சட்டம், 2018 –க்கு 12.08.2018 அன்று குடியரசுத்தலைவர் ஒப்புதல்

- இந்த சட்டமானது, இந்திய தண்டனை விதிகள் இந்திய சாட்சியங்கள் சட்டம்-1872 குற்றவியல் நடைமுறை விதிகள்-1973 மற்றும் குழந்தைகளை பாலியல் குற்றங்களிலிருந்து பாதுகாப்பதற்கான சட்டம் 2012 ஆகிய சட்டங்களில் திருத்தம் மேற்கொள்ளவிருக்கிறது.

### சந்தாலி மொழி

- விக்கிபீடியா இணையதளத்தில் தனது சொந்த எழுத்து வடிவத்தைப் பெற்றுள்ள முதல் இந்திய மலைவாழ் மக்கள் பேசும் மொழி எனும் பெருமையைப் பெற்றுள்ளது.

### "ஒரு மாவட்டம் ஒரு தயாரிப்பு"

- ஒரு மாவட்டம் ஒரு தயாரிப்பு திட்டம் என்ற பெயரில் அடுத்த ஐந்து ஆண்டுகளில் 25 இலட்சம் மக்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் உத்திரப்பிரதேச மாநில அரசின் திட்டத்தை குடியரசுத்தலைவர் 10.08.2018 அன்று லக்னோவில் துவக்கி வைத்தார்.

### PARIVESH (Pro-Active and responsive Facilitation by Interactive, Virtuous and Environmental Single – window Hub:

- PARIVESH என்பது, உலக உயிரி எரிபொருள் தினத்தன்று (ஆகஸ்டு 10) பிரதமர் மோடி அவர்களால் தவக்கி வைக்கப்பட்ட ஒற்றைச் சாரள ஒருங்கிணைந்த சுற்றுசூழல் மேலாண்மை முறைமையாகும் இம்முறையின் மூலம் மாவட்ட, மாநில , மத்திய அளவில் சுற்றுசூழல் துறையின் அனுமதி பெறுவது எளிதாகவுள்ளது.

### தேசிய பேரிடர் மீட்புப் படையில் கூடுதலாக மேலும் நான்கு அணிகள் அமைக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது

- தேசிய பேரிடர் மீட்புப் படை 2006-ம் ஆண்டு உருவாக்கப்பட்ட சிறப்புப் படையாகும்.

## "ஜெம்"

- ஜெம் எனும் பெயரில் இந்திய அரசின் தேசிய பொது கொள்முதல் இணையதளம் துவங்கப்பட்டு இரண்டு ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.

## கஞ்ஜன்ஜங்கா உயிர்க்கோளக் காப்பகம்

- சிக்கிம் மாநிலத்திலுள்ள 'கஞ்ஜன்ஜங்கா உயிர்க்கோளக் காப்பகம்' யுனெஷ்கோவின் உலக உயிர்க்கோள காப்பக வலையமைப்பில் புதிதாக இணைக்கப்பட்டுள்ளது.

## மக்களாட்சி திருவிழா

- "மக்களாட்சி திருவிழா" என்ற பெயரில் கேரள சட்டமன்றத்தின் வைரவிழா ஆண்டு நிறைவு நிகழ்ச்சியை குடியரசுத்தலைவர் 05.08.2018 அன்று துவங்கி வைத்தார்.

## கல்வி கடன்களுக்கான வித்யாலக்ஷ்மி இணையதளம்

- மத்திய அரசினால் 15 ஆகஸ்டு 2015 அன்று துவங்கப்பட்டது. இந்த இணையதளத்தின் மூலம், மாணவர்கள் எளிதாக மத்திய அரசின் பல்வேறு கல்வி உதவித் தொகைகளுக்கு விண்ணப்பிக்கலாம்

## "பரியாதன் பர்வ்"

- பரியாதன் பர்வ் என்ற பெயரில் இந்தியாவின் கலாச்சார பன்முகத்தன்மையை போற்றும் வகையிலான நிகழ்வுகள் மத்திய சுற்றுலா அமைச்சகம் மற்றும் பிற அமைச்சகங்களுடன் ஒத்துழைப்போடு நாடு முழுவதும் "அனைவருக்கும் சுற்றுலா" மற்றும் 'சுற்றுலா மற்றும் நிர்வாகம்" எனும் நோக்கங்களுடன் 16-27 செப்டம்பர் 2018 வரையில் நடைபெறவுள்ளன.

## காடக்நாத் கோழி இறைச்சிக்கு புவியியல் குறியீடு:

- மத்தியப் பிரதேச மாநிலத்தின் ஜாபுவா மாவட்டத்தின் புகழ்பெற்ற "காடக்நாத் கோழி இறைச்சிக்கு" புவியியல் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.

## 'KAKADU 2018'

- "KAKADU 2018" என்ற பெயரில் ஆஸ்திரேலியாவில் 29 ஆகஸ்டு 2018 முதல் 15 செப்டம்பர் 2018 வரை நடைபெறும் பன்னாட்டு கூட்டு கடற்படை ஒத்திகையில் இந்திய கடற்படையின் ஐ.என்.எஸ் சாக்யாத்ரி போர்க்கப்பல் கலந்து கொண்டுள்ளது.

## நார்வே கப்பலுக்கு உதவிய ஐ.என்.எஸ் தேஜ்:

- ஏடன் வளைகுடாவில் பிரச்சனையில் சிக்கித் தவித்த நார்வே நாட்டுக்கு சொந்தமான எம்.வி.வேளா கப்பலுக்கு இந்திய கடற்படையின் ஐ.என்.எஸ்.தேஜ் கப்பல் தேவையான உதவிகளை அளித்து காப்பாற்றியுள்ளது.

## ஜி 20 நாடுகளின் அமைச்சர்களுக்கான டிஜிட்டல் பொருளாதார கூடுகை

- 23-24 ஆகஸ்டு 2018 தினங்களில் அர்ஜெண்டினா நாட்டின் சால்டா நகரில் “நீடித்த வளர்ச்சிக்கான மனநிலையை கட்டமைப்பது” எனும் நோக்கத்தை மையமாகக் கொண்டு நடைபெற்றது.

## பிட்ச் பிளாக் 2018

- “பிட்ச் பிளாக் 2018” என்ற பெயரில் இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் பன்னாட்டு விமானப்படைகளின் கூட்டு இராணுவப்பயிற்சி 24 ஜீலை 2018 முதல் 18 ஆகஸ்டு 2018 வரையில் ஆஸ்திரேலியாவின் டார்வின் நகரில் நடைபெற்றது.
- இந்த கூட்டு இராணுவப்பயிற்சியில் இந்தியா உட்பட 16 நாடுகளின் விமானப்படைகள் பங்குபெற்றன.

## மைத்ரீ 2018

- “மைத்ரீ 2018” என்ற பெயரில் இந்தியா மற்றும் தாய்லாந்து நாடுகளுக்கிடையேயான கூட்டு இராணுவப்பயிற்சி 6-19 ஆகஸ்டு 2018 தினங்களில் தாய்லாந்து நாட்டில் நடைபெற்றது.

## நேபாளத்துக்கு 30 ஆம்புலன்ஸ்களை வழங்கியது இந்தியா

- இந்தியாவின் சுதந்திர தினத்தையொட்டி நேபாளத்துக்கு இந்தியா சார்பில் 30 ஆம்புலன்ஸ் 6 பேருந்துகளை அங்குள்ள மருத்துவமனை அறக்கட்டளை அமைப்புகள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

## அஞ்சல் தலை வெளியீடு

- “இந்தியா மற்றம் தென் ஆப்பிரிக்கா இடையேயான 20 வருட உத்திசார் கூட்டாண்மை” என்ற தலைப்பில் இந்தியா மற்றும் தென் ஆப்பிரிக்கா கூட்டாக இணைந்து வெளியிட்டுள்ள அஞ்சல் தலை குறித்து புதுதில்லியில் 09.08.2018 அன்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் கூடிய மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

## தலைமைப் பொறுப்பிற்கு இந்தியா தேர்வு

- “ஆசிய – பசுபிக் அலைபரப்பு வளர்ச்சி நிறுவனத்தின்” தலைமைப் பொறுப்பிற்கு இந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவுக்கு அமெரிக்கா “எஸ்.டி.ஏ-1” சிறப்பு அந்தஸ்து வழங்கியுள்ளது

- தெற்கு ஆசிய நாடுகளில் முதல் நாடாக இந்தியாவுக்கு “எஸ்.டி.ஏ-1” என்ற சிறப்பு அந்தஸ்தை அமெரிக்கா வழங்கி உள்ளது. ஆசியா கண்டத்தில் ஜப்பானுக்கும், தென்கொரியாவுக்கு மட்டுமே இந்த அந்தஸ்தை அமெரிக்கா தந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## பொதுச் செயலர் கோ.ஃ.பி அன்னான் காலமானார்

- ஐக்கிய நாடுகள் சபையின் 7-வது பொதுச் செயலராக 1997-ம் ஆண்டு முதல் 2006-ம் ஆண்டு வரை இருமுறை பதவி வகித்தார்.
- அமைதியான உலகை கட்டமைக்க பணியாற்றியதற்காக 2001 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளுடன் அமைதிக்கான நோபல் பரிசை கோ.ஃ.பி அன்னான் பகிர்ந்துகொண்டார்.

## “Pacific Endeavor 2018 (PE-18)”

- “Pacific Endeavor” என்ற பெயரில் பன்னாட்டு இராணுவ ஒத்திகை நேபாள நாட்டிலுள்ள காத்மண்டு நகரில் 06.08.2018 முதல் 12 நாட்களுக்கு நடைபெறுகிறது. இந்த பயிற்சியில், ஆசியா மற்றும் பசுபிக் பகுதிகளைச் சேர்ந்த 20 நாடுகளின் இராணுவப் பணியாளர்கள் பங்கு பெற்றனர்.

## “ரெட் பிளஸ் தேசிய அணுகுமுறை திட்டம்”

- வன அழிவு, வனத் தரக்குறைவு அகியவற்றால் ஏற்படும் கார்பன்-டை-ஆக்ஸைடு வெளியீட்டை குறைப்பதற்கான திட்டம்.

## O-SMART

- புவி அறிவியல் அமைச்சகத்தின் “கடல் சேவைகள், தொழில்நுட்பம், ஆழ்ந்து கவனித்தல், வளங்களின் மாதிரி மற்றும் அறிவியல் எனப்படும் (ஓ-ஸ்மார்ட்) திட்டத்திற்கு மத்திய அமைச்சகம் 29.08.2018 அன்று ஒப்புதல் வழங்கியுள்ளது.

## ஆயுஷ்மான் பாரத் திட்டம் 25 செப்டம்பர் 2018-ல் தொடக்கம்

- நாட்டு மக்களில் 50 கோடி பேருக்கு மருத்துவக் காப்பீடு அளிக்கும் ஆயுஷ்மான் பாரத் திட்டம் செப்டம்பர் 25-ஆம் தேதி தொடங்கப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி சுதந்திர உரையின்போது அறிவித்துள்ளார்.

- SAATHI – Sustainable and Accelerated Adoption of efficient Textile Technologies to Help Small Industries

### பிரதான் மந்திரி உஜ்வாலா யோஜனா

- 'பிரதான் மந்திரி உஜ்வாலா யோஜனா' எனப்படும் ஏழைகளுக்கு இலவச எல்.பி.ஜி இணைப்பு வழங்கும் திட்டம் 5 கோடி பயனாளர்களை எட்டி சாதனை படைத்துள்ளது. இந்த திட்டம் கடந்த 1 மே 2016 அன்று பிரதமர் மோடி அவர்களால் அறிவிக்கப்பட்டு மத்திய பெட்ரோலிய அமைச்சகத்தினால் அமல்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

### இ-பாதுஷான் ஹாட் திட்டம்

- மத்திய விவசாய அமைச்சகத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்த திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டுள்ள www.epashuhaat.gov.in என்ற இணையதளத்திள் வாயிலாக கால்நடைகள் உற்பத்தியாளர்கள் மற்றும் விவசாயிகளும் இணைக்கப்படுகின்றனர். இந்த இணையதளத்தின் மூலம் விவசாயிகள் தங்களுக்கு தேவையான கால்நடை இனங்கள், புதிய இனங்கள் மற்றும் அவை கிடைக்கும் இடங்கள் பற்றிய அனைத்து தகவல்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

### பிரதான் மந்திரி கிராம் சதக் யோஜனா

- பெயரிலான கிராமப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்திற்கான கால அளவை 12வது ஐந்தாண்டு திட்டகாலத்திற்கும் மேலாக பிரதமர் தலைமையிலான மத்திய பொருளாதார விவகார அமைச்சகம் நீட்டித்துள்ளது.
- பிரதான் மந்திரி கிராம் சதக் யோஜனா 25 டிசம்பர் 2000-ல் துவங்கப்பட்டது.

### பிரதான் மந்திரி ஃபாசல் பீமா யோஜனா

- பிரதான் மந்திரி ஃபாசல் பீமா யோஜனா எனும் விவசாயிகளின் பயிர் பாதுகாப்பு காப்பீட்டு திட்டத்தின் முதன்மை செயல் அதிகாரியாக ஆஷிஸ் குமார் பூட்டானி நியமிக்கப்பட்டுள்ளார்.

### இந்தியா போஸ்ட் பேமண்ட் வங்கி

- "இந்தியா போஸ்ட் பேமண்ட் வங்கி" சேவையை பிரதமர் மோடி அவர்கள் 1 செப்டம்பர் 2018 அன்று புது தில்லியில் துவங்கி வைத்தார்.
- நாட்டின் மூலை முடுக்கெல்லாம் பரவியுள்ள மூன்று லட்சம் தபால்காரர்கள் மற்றும் கிராம அஞ்சல் பணியாளர்களை கொண்ட அஞ்சல் துறையின் மிகப்பெரிய கட்டமைப்பை இதற்கு பயன்படுத்திக் கொள்வதே இதன் நோக்கமாகும்.

- IPPB –யில் சேமிப்புக் கணக்கு, நடப்புக் கணக்கு, பணம் அனுப்புதல் அரசுத்திட்டப் பயன்களை பயனாளிகள் கணக்கில் நேரடியாக செலுத்துதல், மின்சார கட்டணங்கள் போன்ற கட்டணங்களை செலுத்துதல், வர்த்தக செலுத்துகைகள் போன்ற சேவைகள் வழங்கப்படும். இது போன்ற சேவைகள் அனைத்தும் இந்த வங்கியின் அதிநவீன தொழில்நுட்ப மேடையை பயன்படுத்தி நேரடி கவுண்டர் சேவைகள், சிறிய ஏடிஎம்-கள், கைபேசி வங்கி செயலிகள் எஸ்.எம்.எஸ் மற்றும் ஐ.வி.ஆர் மூலமாக வழங்கப்படும்.

## Google Tez

- 'கூகுள்' நிறுவனத்தின் 'Google Tez' என்ற பெயரிலான 'டிஜிட்டல் பரிமாற்றத்திற்கான மொபைல் செயலியின்' பெயர் 28 ஆகஸ்டு 2018 முதல் 'Google Pay' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

## ஒருங்கிணைந்த தளபதிகள் மாநாடு -2018

- ஒருங்கிணைந்த தளபதிகள் மாநாடு -2018 நியூ டெல்லியில் நடைபெற்று வருகிறது
- ஜூலை 30 – 31 தேதிகளில் நடைபெற்று வரும் இந்த மாநாட்டில் முப்படைத் தளபதிகளும் பங்கேற்றனர்.
- இதில் நாட்டின் பாதுகாப்பு குறித்த கருத்துக்கள் ஆலோசிக்கப்பட்டன.
- இராணுவத் தளபதி – பிபின் ராவத்
- விமானப்படைத் தளபதி – B.S. தனோவா
- கப்பற்படைத் தளபதி – சுனில் லம்பா

## சரியானதை உண்ணுங்கள் இயக்கம் (The Eat Right Movement)

- ஆரோக்கியமான FMCG உணவுப்பொருட்களுக்காக சரியானதை உண்ணுங்கள் இயக்கத்தை உணவு பாதுகாப்பு மற்றும் தரப்படுத்துதல் ஆணையம் தொடங்கியுள்ளது.

## சத்யரூப் சித்தாந்தா உலகின் மிகவுயர்ந்த எரிமலையான ஆவ. ஓஜோஸ் டெல் சலடோவை ஏறிய 2-வது இந்திய மலையேற்ற வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

- இதற்கு முன் சத்யரூப் அண்டார்டிகாவின் மிகவுயர்ந்த சிட்லே எரிமலையை ஏறிய முதல் இந்தியராவார்.
- அர்ஜென்டினா மற்றும் சிலி எல்லையில் செயல்பாட்டில் உள்ள இந்த எரிமலை 6893மீ. உயரங்கொண்டதாகும்.

## இலவசமாக மின்னணு பயிற்சி ஒப்பந்தம்:

- 50 அரசு கல்லூரிகளை சேர்ந்த 9500 மாணவர்களுக்கு இலவசமாக மின்னணு பயிற்சியை வழங்குவதற்காக ராஜஸ்தான் மாநில அரசானது மைக்ரோசாஃப்ட் நிறுவனத்துடனான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இது 500 ஆசிரியர்களுக்கும் பயிற்சியளிக்கும்.
- இந்த ஒப்பந்தத்தின் நோக்கம் மாநிலத்தின் அரசு கல்லூரிகளில் தொழில்நுட்பக் கல்வியை மேம்படுத்துவது திறன் கட்டுமானம் மின்னணு கல்வியறிவை மேம்படுத்துவது மற்றும் ராஜஸ்தான் மாநிலத்தில் மின்னணு கல்வியை மேம்படுத்துவது ஆகும்.

**போசிடோன் 8 இந்தியா (பி 81) விமானம் (Poseidon 8 India (P 81))**

- INS ராஜாளி கடற்படை கப்பலிலிருந்து இந்தியக் கடற்படையை சேர்ந்த நீள்நெடும் கடற்படை ரோந்து போர் விமானமான போயிங் P-81 (போசிடோன் 8 இந்தியா) முதல்முறையாக 26-வது RIMPAC-18 (Rim of the Pacific) எனும் பன்னாட்டு கடற்படை பயிற்சியில் கலந்துகொள்ள உள்ளது.
- இந்தியக் கடற்படையை சேர்ந்த ஒரு விமானம் பசிபிக்கின் கிழக்கு எல்லைக்கு செல்வது இதுவே முதல்முறையாகும். RIMPAC என்பது உலகின் மிகப்பெரிய கடற்படை போர் கப்பல்களின் கூட்டுப்பயிற்சி ஆகும். இதனை அமெரிக்காவின் பசிபிக் கடற்படை பேர்ல் துறைமுகத்தில் நடத்தி வருகிறது.

**பாதுகாப்புத்துறை சம்பள தொகுப்பு குறித்து இந்திய ஸ்டேட் வங்கியுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இந்திய இராணுவம் அண்மையில் கையெழுத்திட்டது.**

- இலவச தனிநபர் விபத்துக் காப்பீடு இலவச நிரந்தர முழு உடல் ஊனமுற்றோர் காப்பீடு மற்றும் படைவீரர் மற்றும் அவர்தம் குடும்பத்துக்கான நன்மைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய பாதுகாப்புத்துறை சம்பள தொகுப்பு குறித்து இந்திய ஸ்டேட் வங்கியுடனான ஒப்பந்தத்தில் இந்திய இராணுவம் கையெழுத்திட்டது.

**ஒரு விவசாயி ஒரு மின்மாற்றி திட்டம்**

- மின்சார இழப்புகளை கட்டுப்படுத்துவதற்காக வரும் ஆகஸ்ட் மாதம் 15 அன்று 'ஒரு விவசாயி ஒரு மின்மாற்றி' என்ற திட்டத்தை மகாராஷ்டிரா மாநில அரசு தொடங்கவுள்ளது.

**வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்** : கழிவுநீர்த் தொட்டியில் மனிதர்கள் இறங்குவதை முற்றிலும் ஒழிப்பதற்காக, தொழில்நுட்ப சவாலை தொடங்கியுள்ளது.

**இந்தியாவின் சர்வதேச காலணி விழா 2018 (IIFA – 2018):**

- 4-வது இந்தியாவின் சர்வதேச காலணி விழா 2018 பிரகதி மைதான் (புதுடெல்லி) நடைபெற்றது.

- IIFA 2018 – India International Footwear Fair 2018
- இதில் உலகளவில் காலணி உற்பத்தியின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் இந்திய காலணி நிறுவனங்களுடன் கருத்துக்கள் ஆலோசிக்கப்பட்டன.

**SAATHI – Sustainable and Accelerated Adoption of efficient Textile technologies to Help small Industries**

- மத்திய ஜவுளித்துறை மற்றும் மத்திய மின்சாரத்துறை ஆகியவை இணைந்து துவங்கிய திட்டம் ஆகும்.
- சிறந்த தொழில்நுட்பங்களை கையாண்டு விசைத்தறித் துறையில் குறைந்த மின்சார செலவில் அதிக உற்பத்திக்கு இத்திட்டம் வழிவகுக்கும்.

**உயிரி எரிபொருள்களுக்கான தேசியக் கொள்கையை (Bio fuel Policy) நடைமுறைப்படுத்திய முதல் இந்திய மாநிலம்- ராஜஸ்தான்.**

- உயர்தர உயிரி எரிபொருள் ஆணையம் (High-Power Biofuel Authority) இச்செயல்பாட்டை அங்கீகரித்துள்ளது. விரைவில் ராஜஸ்தான் மாநில அரசு இதற்கான கொள்கையை வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**ஜி.எஸ்.டி வரியில் 20% ஊக்கத் தொகை**

- பீம் செயலி மற்றும் ரூபே அட்டை பணப்பரிவர்த்தனை மேற்கொண்டால் ஜி.எஸ்.டி வரியில் 20% ஊக்கத் தொகை அளிக்கும் திட்டத்தை மத்திய அரசு வகுத்துள்ளது.
- மின்னனு பணப்பரிவர்த்தனையை ஊக்குவிக்கும் வகையில் இத்திட்டம் விரைவில் அமல்படுத்தப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது.
- இந்தத் திட்டத்தை அமல்படுத்துவதற்கான ஒப்புதலை பீகார் துணை முதல்வர் சுஷில் குமார் மோடி தலைமையிலான மாநில அமைச்சர்கள் குழு ஒப்புதல் அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**கொலீஜியம் குழு**

- அரசு விதிப்படி, உச்ச நீதிமன்ற கொலீஜியம் அமைப்பின் பரிந்துரையை மத்திய அரசு ஒரு முறை மட்டுமே திருப்பி அனுப்ப முடியும்.
- உத்தரகண்ட் மாநில தலைமை நீதிபதி கே.எம். ஜோசப்பை உச்சநீதிமன்ற நீதிபதியாக பதவி உயர்த்த கடந்த ஜனவரி 10 ஆம் தேதி உச்சநீதிமன்ற கொலீஜியம் குழு பரிந்துரைத்தது.
- எனினும் மத்திய அரசு, ஏப்ரல் 30 அன்று இந்த பரிந்துரையை திருப்பி அனுப்பியது.

- தற்போது, மீண்டும் கே.எம். ஜோசப்பின் பெயரை கொலீஜியம் பரிந்துரைத்ததைத் தொடர்ந்து மத்திய அரசு வேறு வழியின்றி ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இதன் மூலம் கே.எம். ஜோசப் வினீத் சரண் & இந்திரா பானர்ஜி ஆகிய மூவரையும் சேர்த்து உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 25 ஆக உயர்ந்துள்ளது.

## அஸ்ஸாம் மாநிலத்தில் வங்கதேசத்தவர்கள் ஊடுருவி தலைமுறைகளை கடந்து நிரந்தர குடிமக்களாக வாழ்ந்து வருகின்றனர்.

- இவர்களை கண்டறியும் வகையில் தேசிய குடிமக்கள் பதிவேடு (என்ஆர்சி) தயாரிக்கப்பட்டு அதன் வரைவு பட்டியல் வெளியிடப்பட்டது.
- அதில், வெளிநாட்டினருக்கான தீர்ப்பாயத்தில் வழக்குகளை எதிர்கொண்டுள்ள நபர்களும், அங்கு இந்தியர் அல்ல என நிராகரிக்கப்படும்
- நபர்களும் தேசிய குடிமக்கள் பதிவேட்டின் இறுதிப் பட்டியலில் இடம்பெற மாட்டார்கள் என்று திட்ட ஒருங்கிணைப்பாளர் பிரதீக் ஹஜிலா தெரிவித்தார்.

## கேரள மாநில சட்டம் பேரவை

- கேரள மாநில சட்டம் பேரவை உருவாகி 60 ஆண்டுகள் நிறைவுற்றது.
- இதற்கான வைர விழா கொண்டாட்டம் தற்போது கொண்டாடப்பட்டு வருகிறது.
- இந்த விழாவின் இறுதி நாளில் (ஆகஸ்ட் 6) ஜனநாயகத் திருவிழா நடைபெற உள்ளது.
- இதனை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் துவங்கி வைக்க உள்ளார்.

## No Horn என்ற திட்டம்

- No Horn என்ற திட்டம் சிம்லா, மணாலி (இமாச்சலப்பிரதேசம்) தொடங்கப்பட்டுள்ளது.
- இமாச்சலப்பிரதேசத்தின் முதல்வர் ஜெய்ராம்தாக்கூர் “Horn Not Ok” என்ற நோக்கத்தோடு Shoor Nahin என்ற அலைபேசி செயலியையும் தொடங்கி வைத்தார்.
- வாகனங்களால் ஏற்படும் ஒலியால் (Horn) ஏற்படும் இரைச்சலை கட்டுப்படுத்துவதற்காகவும் அமைதியான சுற்றுச்சூழலை உருவாக்குவதற்காகவும் இந்த திட்டத்தை அவர் தொடங்கியுள்ளார்.

## உலக வானிலை ஆய்வு அமைப்பால் ஆசிய நாடுகளுக்கு திடீர் வெள்ளப்பெருக்கு முன்னறிவிப்புகளை தயாரிப்பதற்கான ஒருங்கிணைந்த மையமாக இந்தியா அறிவிக்கப்பட்டுள்ளது

- வியட்நாம், இலங்கை, மியான்மர் மற்றும் தாய்லாந்து உள்ளிட்ட ஆசிய நாடுகளுக்கு திடீர் வெள்ளப்பெருக்கு முன்னறிவுப்புகளை தயாரிப்பதற்காக உலக வானிலை ஆய்வு அமைப்பால் இந்தியா ஒருங்கிணைந்த மையமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## TRAI – The Telecom Regulatory Authority of India

- 2022 ஆண்டளவில் பூஜ்ஜிய தொலைத்தொடர்பு உபகரணங்கள் (Zero Telecom Equipment) இறக்குமதியை TRAI கோருகிறது.
- தொலைத்தொடர்புத் துறையில் ஆராய்ச்சி மற்றும் புதிய கண்டுபிடிப்புகளுக்காக TRAI ரூ.1000 கோடி நிதி ஒதுக்கியுள்ளது.
- TRAI –ன் **DND 2.0 & Mycall** செயலிகள் **UMANG** செயலியுடன் ஒருங்கிணைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.
- UMANG – Unified Mobile Application for New-age Governance இதன் மூலம் இந்திய குடிமக்கள் UMANG செயலி மூலம் பல்வேறு அரசுக் சேவைகளை ஒரே தளத்தில் பெற இயலும்.

## Holytech நிறுவனம் ஆந்திர பிரதேசம் மாநிலத்துடன் ஒப்பந்தம்

- Holytech நிறுவனம் தனது ஆலையை அமைக்க ஆந்திர பிரதேசம் மாநிலத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.
- ஆந்திராவிலுள்ள திருப்பதி மற்றும் சித்தூர் மாவட்டங்களில் சுமார் 75 ஏக்கர் பரப்பளவில் இந்த மின்னணு ஆலை அமைக்கப்பட உள்ளது.
- இதன் மூலம் சுமார் 6000 பேருக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்த முடியும்.

## தகவல் அறியும் உரிமைச்சட்டம்

- வெளிநாடு வாழ் இந்தியர்கள் தகவல் அறியும் உரிமைச் **(Right To Information – RIT)** சட்டத்தின் கீழ் தகவல் கோர முடியாது என மத்திய அரசு அறிவித்துள்ளது.
- மத்திய அரசின் பல்வேறு துறைகளின் நிர்வாக ரீதியிலான தகவல்களைக்கோரி RTI சட்டத்தின் கீழ் விண்ணப்பிக்க இந்திய குடிமக்களுக்கு மட்டுமே உரிமை உள்ளது என்று மத்திய பணியாளர் துறை இணையமைச்சர் ஜிதேந்திர சிங் கூறினார்.
- மேலும், RTI விண்ணப்பங்களை கையாளவும், அவற்றுக்கு பதிலளிக்கவும் நாடு முழுவதிலும் சுமார் 2,200 அரசு அலுவலங்களின் கணினிகள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன எனவும் அவர் கூறினார்.

## ஷரத்து 35A

- வெளி மாநிலத்தவர் ஜம்மு-காஷ்மீரில் அசையா சொத்து வாங்குவதை தடைசெய்யும் அரசியலமைப்பின் ஷரத்து **35A**
- 1954-ல் அப்போதைய குடியரசுத்தலைவர் ராஜேந்திர பிரசாத் அவர்களால் இது அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டது.

- வெளி மாநிலத்தவரை திருமணம் செய்யும் பெண்களுக்கு சொத்துரிமையை மறுப்பதற்கும் இந்த ஷரத்து வழி வகை செய்கிறது. இது அவரது வாரிசுகளுக்கும் பொருந்தும்.

### சிறுமிகளை பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்குவோருக்கு சிறை தண்டனை வழங்கும் அவசர சட்டம்

- இந்தியாவில் சிறுமிகளை பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்குவோருக்கு சிறை தண்டனை வழங்கும் சட்டம் மத்திய பிரதேசம், ராஜஸ்தான், ஹரியானா, அருணாச்சலப் பிரதேசம் மாநிலங்களில் நடைமுறையிலுள்ளது
- 12 வயதுகுட்பட்ட சிறுமிகளை பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்குவோருக்கு சிறை தண்டனை வழங்கும் அவசர சட்டம் ஏப்ரல் 21-ல் நடைமுறைப்படுத்தபட்டது.
- இது ஜுலை 30-ல் மக்களவையிலும், ஆகஸ்ட் 6-ல் மாநிலங்களவையிலும் நிறைவேறியது.

### வியத்தகு இந்தியா 2.0

- உலக நாடுகளிடையே இந்திய சுற்றுலாவை ஊக்குவிப்பதற்காக இந்தியா தொடங்கியுள்ள பிரச்சாரம் வியத்தகு இந்தியா 2.0 ஆகும்.
- இதன் ஒரு பகுதியாக பல்வேறு மொழிகளில் தகவல் பெறும் வசதியுடன் கூடிய சுற்றுலா உதவி எண், சுற்றுலா திருவிழாக்கள், ஆன்மீகச் சுற்றுலாவை ஊக்குவிப்பதற்காக சர்வதேச பௌத்த் மாநாடு, 165 நாடுகளின் குடிமக்களுக்கு இ-விசா வசதி நீட்டிக்கப்பட்டுள்ளது.

### தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்

- அண்மையில் தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கு அரசமைப்பு அந்தஸ்து வழங்கும் மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேறியது.
- தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் தேசிய ஆணையத்துக்கு நிகராக தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்துக்கு அரசமைப்பு அதிகாரம் வழங்கும் மசோதா மக்களவையில் ஆகஸ்ட் 2-ம் தேதியும், மாநிலங்களவையில் ஆகஸ்டு 6-ம் தேதியும் நிறைவேற்றப்பட்டது.

### “பிராணம்” திட்டம்:

- அரசு ஊழியர்கள் தங்களின் பெற்றோர் மற்றும் மாற்றுத்திறனாளி உடன்பிறந்தார்களை பராமரிப்பதை உறுதிசெய்யும் விதமாக நாட்டிலேயே முதன் முறையாக மற்றும் தனித்துவமாக “பிராணம்” என்ற திட்டத்தை அசாம் மாநில அரசு செயல்படுத்தவுள்ளது.
- இதன்படி, அரசுப்பணியிலிருந்து, தங்களது பெற்றோரை சரிவர பராமரிக்கவில்லை என்றால் அவர்களது சம்பளத்தில் 10-15% வரை பிடித்தம் செய்யப்படும். மேலும், தங்களது மாற்றுத் திறனாளி சகோதர, சகோதரிகளையும் அரசு ஊழியர்கள் பராமரிக்க வேண்டியது அவசியம்.

இப்புதிய சட்டம் அக்டோபர் மாதம் 2-ம் தேதி (காந்தி ஜெயந்தி) முதல் அமலுக்கு வருகிறது.

## ஆயுஷ்மான் பாரத் திட்டம்

- நாட்டு மக்களில் 50 கோடி பேருக்கு மருத்துவ காப்பீடு அளிக்கும் ஆயுஷ்மான் பாரத் திட்டம் செப்டம்பர் 25 தொடங்கப்படுகிறது என பிரதமர் அறிவித்துள்ளார்.
- பாரதிய ஜனசங்கத்தை உருவாக்கிய தீனதயாள் உபாத்யாயாவின் பிறந்த தினமான செப்டம்பர் 25-ஆம் தேதி முதல் இத்திட்டம் தொடங்கப்படுகிறது.
- ஒவ்வொரு ஏழைக்குடும்பத்திற்கும் ரூ.5 லட்சம் மதிப்பிலான மருத்துவகாப்பீடு இதன் மூலம் அளிக்கப்படுகிறது. இது உலகத்தின் மிகப்பெரிய மருத்துவகாப்பீடு திட்டமாகும்.

## Pitch to Move

- போக்குவரத்துறையில் துளிர் நிறுவனங்களை உருவாக்குவதற்காக, **Pitch to Move** போட்டியை NITI ஆயோக் தொடங்கியுள்ளது.
- சுற்றுச் சூழலுக்கு உகந்த புதுமையான போக்குவரத்து தீர்வுகளை வழங்கும் துளிர் நிறுவனங்களை அடையாளங்கண்டு அவற்றை கௌரவிப்பதை இந்தப் போட்டி நோக்கமாகக் கொண்டுள்ளது. வளர்ந்துவரும் தொழில்முனைவோர்களுக்கு தங்களின் திறமையை நிரூபிக்க ஒரு வாய்ப்பினை இப்போட்டி வழங்குகிறது.

## உலக அளவில் செயற்கைக்கோள் தயாரிப்பில் இந்தியா 5-வது இடம்

- இதனை ISRO (Indian Space Research Organization) -இன் முன்னாள் இயக்குநர் "மயில்சாமி அண்ணாதுரை" கூறினார்.
- இவர் மத்திய அரசின் கீழ் விண்வெளித் துறையில் 36 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்றது குறிப்பிடத்தக்கது.
- ISRO-இன் தற்போதைய இயக்குநர் மு. சிவன்.

## INS அரிஹந்த்

- நீர் மூழ்கி கப்பலில் இருந்து அணு ஆயுதத்தை சுமந்து சென்று தாக்கும் அதி நவீன ஏவுகணையை **INS** அரிஹந்த் நீர் மூழ்கிக் கப்பலிலிருந்து இந்தியா வெற்றிகரமாக பரிசோதித்துள்ளது.
- இதன் மூலம் தெற்காசியாவில் ராணுவ பலத்தில் இந்தியா முன்னிலையில் உள்ளது.
- நீர் மூழ்கிக் கப்பலில் இருந்து அணு ஆயுத ஏவுகணையை செலுத்தும் திறனுடைய நாடுகளில் 6-வதாக இந்தியா இணைந்துள்ளது.

### ஐ.நா. பொதுச்சபையில் ஹிந்தியில் உரையாற்றிய முதல் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் -அடல் பிகாரி வாஜ்பாய்

- ஐ.நா. பொதுச்சபையில் முதல்முறையாக 1977 ஆம் ஆண்டு உரையாற்றிய வாஜ்பாய் அதற்கு பிறது 2003-ஆம் ஆண்டு வரை 7 முறை உரை நிகழ்த்தியுள்ளார்.
- ஐ.நா. பொதுச்செயலாளர் - அன்டோனியோ குட்டெரெஸ்

### தேசத்தின் அபிமானமிக்க நிறுவனங்களின் பட்டியல் 2018-ல் பாரத ஸ்டேட் வங்கிக்கு முதலிடம் கிடைத்துள்ளது.

- நிதித் துறையைப் பொறுத்தவரையில் பாரத ஸ்டேட் வங்கி முதலிடத்திலும் எல்ஐசி இரண்டாவது இடத்திலும் உள்ளன.
- ஆட்டோமொபைல் பிரிவில் டாடா மோட்டார்ஸ் முதலிடத்தில் உள்ளது.
- உணவுப்பொருள் நிறவனங்களில் அமுல் முதலிடத்திலும் உள்ளது. இரண்டாவது இடம் பதஞ்சலிக்கு கிடைத்துள்ளது.
- தொலைதொடர்பு சேவையில் ரிலையன்ஸ் ஜியோவுக்கு இணையாக பிஎஸ்என்எல் நிறவனமும் தேசத்தின் அபிமானத்தைப் பெற்றுள்ளது.
- வீட்டு உபயோகப் பொருள் வரிசையில் நிர்மா முதலிடத்தில் உள்ளது தேநீர், காபி, வரிசையில் டாடா டீ முதலிடத்திலும் உள்ளது.

### சிறந்த விற்பனையாளர் பட்டம் வென்ற அமுல் பிராண்ட் நிறுவனம்

- Amul பிராண்ட் பால் பொருட்களை குஜராத்திலுள்ள GCMMF (Gujarat Co-operative Milk Marketing Federation Ltd) தயாரித்து விற்பனை செய்து வருகிறது.
- இதற்கு இந்த ஆண்டின் சிறந்த விற்பனையாளர் என்ற பட்டத்தை IAAI (International Advertising Association of India) வழங்கியது.

### தீவுகளின் வளர்ச்சிக்கான முதலீட்டாளர்கள் மாநாடு

- நிதி அயோக், மத்திய உள்துறை அமைச்சகம் மற்றும் அந்தமான் நிக்கோபர், இலட்ச தீவுகள் நிர்வாகங்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் 10 ஆகஸ்ட் 2018-ல் புது தில்லியில் நடைபெற்றது.

### MOPAD (Multi Option Payment Acceptance Device)

- என்ற பெயரில் புதிய பணம் செலுத்து இயந்திரத்தை ஸ்டேட் பாங் ஆ.்.ப் இந்தியா வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது.

## விருதுகள்

- மத்திய அறிவியல் தொழில்நுட்பத் துறையின் 'J.C Bose Fellowship 2018' ஹைதராபாத் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் அப்பா ராவ் போடிலே-க்கு வழங்கப்பட்டுள்ளது.
- தேசிய நல்லாசிரியர் விருது 2018-க்கு கோவையை சேர்ந்த ஆசிரியர் ஷதி என்பவர் மட்டும் தமிழகத்திலிருந்து தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- 24வது 'ராஜிவ் காந்தி தேசிய சாத்பவனா விருது' 2018 கோபால கிருஷ்ண காந்தி-க்கு வழங்கப்பட்டுள்ளது.

## உலக சுகாதார நிறுவனத்தின் உலக புகையிலை ஒழிப்பு தின விருது 2018

- புது தில்லி அரசின் கூடுதல் சுகாதார இயக்குநர் எஸ்.கே.அரோரா-விற்கு வழங்கப்பட்டுள்ளது.

## அமெரிக்க அரசின் விருது

- இந்திய இராணுவத்தின் முன்னாள் தலைமைத் தளபதி தல்பீர் சிங் சுகாக்-கிற்கு வழங்கப்பட்டுள்ளது.

## அல்பானி மருத்துவ மைய பரிசு 2018

- ஜேம்ஸ் ஆலிசன், கார்ல் ஜீன் ஸ்டீபன் ரோஷன்பர்க் அகிய மூன்ற அமெரிக்க மருத்தவ ஆராய்ச்சியாளர்களுக்கு அவர்களின் மருத்துவம் மற்றும் உயிரி மருத்துவம் சார்ந்த ஆராய்ச்சிகளுக்காக வழங்கப்பட்டுள்ளது.

## கீர்த்தி சக்ரா பதக்கம் 2018

- காஷ்மீரில் 3 தீவிரவாதிகளைக்கொன்று விட்டு வீரமரணமடைந்த இராணுவ வீரர் விரமா பால் சிங்கிற்கு வழங்கப்பட்டுள்ளது.

## தமிழக அரசின் சுதந்திர தின நல் ஆளுமை விருதுகள் - முழு பட்டியல்

- டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம் விருது, 2018: தக்ஷா குழு, வான்வெளி ஆராய்ச்சி மையம், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை.
- துணிவு மற்றும் சாகசச் செயலுக்கான கல்பனா சாவ்லா விருது: சிறுத்தை புலியை விறகு கட்டையால் தனி ஆளாக விரட்டி மகளை காப்பாற்றி செயலுக்காக கோவை மாவட்டம் வால்பாறையில் உள்ள பெரிகல்லார் கிராமத்தின் ஐ.முத்துமாரிக்கு வழங்கப்படுகிறது.
- முதலமைச்சரின் நல் ஆளுமை விருதுகள்:

  1)பதிவுத் துறை - 'Project-Star 2.0' என்ற இணைய மென்பொருள் மூலம் பொதுமக்களுக்கு துரிதமான பதிவு மற்றும் இணைய சேவைகளை வழங்குதல்.

**2)உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை –** தமிழ்நாட்டில் பொது விநியோக முறையினை 'End-to-end' முறையில் கணினிமயப்படுத்துதல் (வகை-அமைப்பு).

❖ மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக மிகச் சிறந்த சேவை புரிந்தோருக்கான தமிழ்நாடு அரசு விருதுகள்:

1)சிறந்த மருத்துவர் - டாக்டர். பா.செந்தில்குமார்

2)சிறந்த சமூகப் பணியாளர் - முனைவர்.லதா இராஜேந்திரன்

3)சிறந்த தொண்டு நிறுவனம் - அறிவாலயம் : மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான சிறப்புப் பள்ளி மற்றும் மறுவாழ்வு மையம், கைலாசபுரம், திருச்சி.

4)மாற்றுத் திறனாளிகளுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்பு அளித்த "சிறந்த தனியார் நிறுவனம்"

டெட்டி எக்ஸ்போர்ட்ஸ் தென்காசி ரோடு, திருமங்கலம் மதுரை.

5)மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பாக செயல்படும் "சிறந்த மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி" – சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி லிமிடெட்.

**சிறந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கான முதல்வர் விருதுகள்:**

சிறந்த மாநகராட்சி திருப்பூர் பரிசுத்தொகை ரூ.25 இலட்சம்.

**சிறந்த நகராட்சிகள்:**

முதல் பரிசு – கோவில்பட்டி - ரூ.15 லட்சம்

இரண்டாம் பரிசு – கம்பம் - ரூ.10 லட்சம்

மூன்றாம் பரிசு – சீர்காழி - ரூ.5 லட்சம்

**சிறந்த பேரூராட்சிகள் :**

முதல் பரிசு – ஜலகண்டாபுரம், சேலம் - ரூ.10 லட்சம்

இரண்டாம் பரிசு – பழனிசெட்டிபட்டி, தேனி - ரூ.5 லட்சம்

மூன்றாம் பரிசு – பாலகோடு, தருமபுரி - ரூ.3 லட்சம்

## சத்தீஸ்கர் ஆளுநராக ஆனந்தி பென் படேல் கூடுதல் பொறுப்பேற்றார்:

❖ சத்தீஸ்கர் ஆளுநராக பதவி வகித்துவந்த பல்ராம்ஜி தாஸ் டாண்டன் மரணமடைந்ததையொட்டி, மத்தியப் பிரதேச ஆளுநரான அனந்தி பென் படேல், சத்தீஸ்கர் ஆளுநராக புதன்கிழமை கூடுதல் பொறுப்பேற்றுள்ளார்.

## புதிதாக மூன்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் நியமனம்:

- உத்தரகாண்ட் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி கே.எம்.ஜோசப் சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி இந்திரா பானர்ஜி, ஒடிசா உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி வினீத் சரண் ஆகியோர் உச்ச நீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம், உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 25 ஆக உயர்ந்துள்ளது.

## WHO

- 2030-க்குள் கல்லீரல் அழற்சி நோயை ஒழிப்பதற்காக **WHO** அமைப்புடன் இணைந்த மத்திய அரசு தேசிய நச்சுயிரி கல்லீரல் அழற்சி நோய்க்கட்டுப்பாடு திட்டத்தை தொடங்கி உள்ளது
- மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகமானது தேசிய நச்சுயிரி கல்லீரல் அழற்சி நோய்க்கட்டுப்பாடு திட்டத்தை தொடங்கியுள்ளது.
- இதன் கீழ், ‘B’ மற்றும் ‘C’ வகை கல்லீரல் அழற்சி நோய்க்கான மருந்துகள் மற்றும் நோயறிதல் சிகிச்சைகள் அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் இலவசமாக வழங்கப்படும்.

## ஒரு மாவட்டம் ஒரு தயாரிப்பு

- ராம்நாத் கோவிந்த் (இந்தியக் குடியரசுத் தலைவர்) அவர்கள் “ஒரு மாவட்டம் ஒரு தயாரிப்பு” (One District one Product) என்ற மாநாட்டை துவங்கி வைத்தார்.
- ஆகஸ்ட் 10, 2018 அன்று உத்திரப் பிரதேச மாநிலம், லக்னோவில் தொடங்கப்பட்டது.
- இதில் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் வளர்ச்சி பற்றிய கருத்துக்கள் ஆலோசிக்கப்பட்டன.

## வாழ்வதற்கு உகந்த நகரங்களின் பட்டியலில் பூனே முதலிடம்

- இப்பட்டியலில் நவிமும்பை இரண்டாவது இடத்தையும், கிரேட் மும்பை மூன்றாவது இடத்தையும், திருப்பதி நான்காவது இடத்தையும் பிடித்துள்ளது.

## முன்னாள் பிரதமர்கள் அருங்காட்சியகம்

- புதுடெல்லி நகரத்தில் இந்தியாவின் முன்னாள் பிரதமர்கள் அருங்காட்சியகம் அமைய உள்ளது?
- டெல்லியில் உள்ள நேருவின் நினைவகமான தீன்மூர்த்திப வன் வளாகத்தில் இது அமைய உள்ளது என்று மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அறிவித்துள்ளார்.

## சஞ்சார் கிராந்தி திட்டம்

- சஞ்சார் கிராந்தி திட்டம் என்ற திறன்பேசி திட்டத்தை சத்தீஸ்கர் மாநில அரசு தொடங்கியுள்ளது
- இத்திட்டம் இந்திய குடியரசுத்தலைவரான ராம்நாத் கோவிந்த் அவர்களால் அம்மாநிலத்தில் உள்ள நக்சல் பாதிக்கப்பட்ட பகுதியான பஸ்தாரில் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் மாநிலம் முழுவதும் உள்ள கிராமப்புற, நகர்புற ஏழைகள் மற்றும் கல்லூரி மாணவர்கள் என 50 லட்சம் பேருக்கு திறன்பேசிகள் இலவசமாக வழங்கப்படும்.
- மாநிலத்தில் அலைபேசி பயன்பாட்டை அதிகரிப்பதே இத்திட்டத்தின் இலக்கு. நாட்டின் சராசரி அலைபேசி பயன்பாடான 68 சதவீதத்திற்கும் குறைவான அலைபேசி பயன்பாடு (29%) சத்தீஸ்கரில் நிலவுகிறது.

## உலகின் மிகச்சிறிய மருத்துவ ரோபோ

- ‘உலகின் மிகச்சிறிய மருத்துவ ரோபோவை’ அமெரிக்காவின் சோடிக் பெடல் என்பவர் உருவாக்கியுள்ளார். 120 நானோ மீட்டர் அளவிலுள்ள இந்த ரோபோவின் மூலம் கேன்சர் மற்றும் அல்ஷிமியர் போன்ற நோய்களின் சிகிச்சைகளை மேற்கொள்ள முடியும்.

## கேரள மீட்பு பணிக்கு உதவும் “இஸ்ரோ” செயற்கைக்கோள்கள்:

- இஸ்ரோவின் ஓஷியன் சாட் -2, ரிசோர்ஸ் சாட் -2, கார்டோ சாட்-2 மற்றும் 2ஏ இன்சாட்-3 டி.ஆர் ஆகிய செயற்கைக்கோள்கள், வெள்ளத்தால் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகி உள்ள இடத்தை கண்டறிந்து அந்த இடங்களை படம்பிடித்து பூமிக்கு அனுப்பி வைத்துள்ளன. அந்த புகைப்படங்களின் உதவியுடன் பாதிக்கப்பட்ட இடங்களை கண்டறிந்து உடனடியாக சென்று அங்கு சிக்கியுள்ளவர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

## “ககன்யான் 2022”

- 2022 ஆம் ஆண்டுக்குள் மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் திட்டம் நிறைவேற்றப்படும் என்று சுதந்திர தின உரையின்போது பிரதமர் மோடி அவர்கள் அறிவித்துள்ளார்.
- “ககன்யான்” என பெயரிடப்பட்டு உள்ள இந்த திட்டம் 2022-ம் ஆண்டுக்குள் செயல்படுத்தப்படும்.

## சூரியனுக்கு செல்லும் ‘பார்கர் சோலார் புரோப்’ விண்கலம்:

- ஆமெரிக்க விண்வெளி அய்வு மையமான நாஸா சூரியனை ஆய்வு செய்வதற்காக பார்க்கர் விண்கலத்தை 11.08.2018 அன்று ஃபுளோரிடா மாகாணம் கெப் கெனவரல் ஏவுதளத்தில் இருந்து டெல்டா 4 ராக்கெட் மூலம் செலுத்தியது.

## ஜிசாட் -11 செயற்கைக்கோள்

- இந்திய விண்வெளி ஆராயச்சி மையத்தின் மிக அதிக எடையிலான ஜிசாட்-11 தகவல்தொடர்பு செயற்கைக்கோள் 30 நவம்பர் 2018-ல் பிரஞ்சு கயனாவிலிருந்து விண்ணில் செலுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## 18-வது ஆசியப் போட்டிகளில் இந்தியா

- 18-வது ஆசியப் போட்டிகள் இந்தோனேஷியாவின் ஜகார்த்தாவில் 18.08.2018 முதல் 2 செப்டம்பர் 2018 வரையில் நடைபெறுகிறது.
- ஆசிய விளையாட்டுப் போட்டிகளுக்கு "ஆசியாட்" என்ற மற்றொரு பெயரும் உண்டு.
- 19-ஆவது ஆசியப் போட்டிகள் சீனாவின் 'ஹாங்சோ' நகரில் 2022 ஆம் ஆண்டு நடைபெறவுள்ளன.
- 2018 ஆசியான் போட்டிகளின் நோக்கம் "ஆசியாவின் ஆற்றல்" என்பதாகும்.

## தடகளம்

- 1500 மீ.ஓட்டத்தில் இந்தியாவின் ஜின்ஸன் ஜான்சன் தங்கம் வென்றார்.
- 800மீ ஆடவர் ஓட்டத்தில் மஞ்சித் சிங் தங்கம் வென்றுள்ளார்.
- 4*400 மீ தொடர் ஓட்டப்பந்தயத்தில் ஹீமா தாஸ், பூவம்மா ராஜூ மச்சேந்திரா, சரிதாபென் லஷ்மன்பாய் காயக்வாட், விஸ்மாயா வெல்லுவா கோரோத் ஆகியோர் கொண்ட இந்திய மகளிர் அணி தங்கம் பதக்கம் வென்றது.
- மும்முறை தாண்டுதலில் இந்திய வீரர் அர்பிந்தர் சிங் அபாரமாக தாண்டி தங்கப் பதக்கம் வென்றார்.
- மகளிர் ஹெப்டதலானில் ஸ்வப்னா பர்மன் தங்கம் வென்றார்.
- ஆடவர் குண்டு எறிதலில் இந்தியாவின் மஜிந்தர்பால் சிங் தங்கப் பதக்கம் வென்றார்.

## மல்யுத்தம்

- மல்யுத்தத்தில் ஆடவர் பிரிவில் பஜ்ரங் புனியா இந்தியாவுக்கு முதல் தங்கத்தை பெற்று தந்தார்.

## டென்னிஸ்

- ஆடவர் டென்னிஸ் இரட்டையர் பிரிவுப் போட்டியில் இந்தியாவின் ரோஹன் போப்பண்ணா-டி விஜ் சரண் இணை கஸகஸ்தானைச் சேர்ந்த பப்லிக்- யெவ்சேவை 6-3, 6-4 என்ற நேர் செட்களில் தோற்கடித்து தங்கம் வென்றுள்ளார்.

## “கோ-கோ” விளையாட்டிற்கு அங்கீகாரம்

- கோ-கோ விளையாட்டிற்கு ஆசிய ஒலிம்பிக் கவுண்சில் 19-08-2018 அன்று அங்கீகாரம் வழங்கியுள்ளது.
- இந்தியாவின் தனித்துவம் வாய்ந்த “கோ-கோ” விளையாட்டிற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதால் இனி வரும் ஆசிய விளையாட்டுகளில் கோ-கோ-வும் ஒரு அங்கமாக இருக்கவுள்ளது.

## டிஎன்பிஎல் - மதுரை பேந்தர்ஸ் சாம்பியன்

- டிஎன்பிஎல் இறுதி ஆட்டத்தில் திண்டுக்கல் டிராகன்ஸ் அணியை தோற்கடித்து, மதுரை பேந்தர்ஸ் அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று முதல்முறையாக சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.

## அமுல் நிறுவனத்திற்கு சிறந்த விளம்பர விருது

- சர்வதேச இந்திய விளம்பர சங்கத்தின் ‘2018 ஆம் ஆண்டிற்கான சிறந்த விளம்பர விருது’ குஜராத் மாநிலத்தின் ‘அமுல்’ நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

## புத்தகங்கள்

- “Atal Ji Ne Kaha” என்ற பெயரில் மறைந்த அடல்பிகாரி வாஜ்பாய் அவர்களைப்பற்றி, பிரிஜேந்திர ரேகி தொகுத்த புத்தகத்தை பிரதமர் மோடி அவர்கள் 24 ஆகஸ்டு 2018 அன்று வெளியிட்டுள்ளார்.
- “No Spin” எனும் பெயரில் ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் ‘ஷான் வார்னே’ வின் சுயசரிதை வெளியாகவுள்ளது.
- “281 and Beyond” என்ற பெயரில் இந்திய முன்னாள் கிரிக்கெட் வீரர் VVS லக்ஷ்மன் தனது சுயசரிதையை வெளியிடவுள்ளார்.
- “Jewellery – குலாப் கோத்தாரி
- “தர்மயத்தத்தில் கர்ம யோகியும் ஞான யோகியும்” என்ற பெயரில் டாக்டர் பிரியா ராமசந்திரன் எழுதிய புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது.

- ஸ்டெல்லைட் ஆலையை ஆய்வு செய்ய ஓய்வு பெற்ற ஐகோர்ட் நீதிபதி எஸ்.ஜே.வசிப்தர் தலைமையில் 3 பேர் கொண்ட குழு அமைத்து தேசிய பசுமை தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது.
- புதிய தலைமைச்செயலக கட்டிட விசாரணை ஆணையத்தின் பொறுப்பில் இருந்து நீதிபதி ஆர்.ரெகுபதி ராஜினாமா செய்துள்ளார்.
- அரசுப் பணியில் விளையாட்டு வீரர்களுக்கு 2 சதவீத உள் ஒதுக்கீடு வழங்கப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.
- பெண் பயணிகளின் பாதுகாப்பை அதிகரிப்பதற்காக, சென்னையிலுள்ள ஷெனாய் நகர், கோயம்பேடு மெட்ரோ ரெயில் நிலையங்களை நிர்வகிக்கும் பெறுப்பு முழுமையாக பெண் ஊழியர்களிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது
- மத புனித நூல்களை அவமதித்தால் ஆயுள் சிறை தண்டனை விதிக்க வகை செய்யும் சட்ட திருத்த மசோதாக்கள் பஞ்சாப் சட்டப் பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.
- இந்தியாவில் முதல்முறையாக உயிரி (பயோ) எரிபொருள் மூலம் விமானம் ஸ்பைஸ் ஜெட் விமான நிறுவனம் மூலம் இயக்கப்பட்டுள்ளது.
- “Bombay Natural History Society (BNHS)” – தனது முதல் பிராந்திய மையத்தை சிலிக்கா ஏரி பகுதியில் துவங்கியுள்ளது.
- ஆறாவது சர்வதேச புத்த சமய மாநாட்டினை புது தில்லியில் 23 ஆகஸ்டு 2018 அன்று குடியரசுத் தலைவர் திரு.ராம்நாத் கோவிந்த் அவர்கள் துவங்கி வைத்தார்.
- இந்திய வங்கிகள் மாநாடு 2018 புது தில்லியில் 23-24 அகஸ்டு 2018 தினங்களில் நடைபெற்றது.
- எஸ்.சி/எஸ்.டி குடும்பத்தினருக்கு வழங்கப்பட்டு வந்த இலவச மின்சாரத்தை 50 யுனிட்டிலிருந்து 101 யுனிட்டாக தெலுங்கானா அரசு உயர்த்தியுள்ளது
- எம்.பி., எம்.எல்.ஏக்களின் செயல்பாடுகளை மதிப்பிட உதவும் “நேதா செயலி” அறிமுகம்.
- உலகின் உயரமான போர்க்களமான சியாச்சினில் வீரர்களுக்கு உயரிய மருத்துவ சிகிச்சை வழங்குவதற்காக இஸ்ரோவுடன் மத்திய பாதுகாப்புத் துறை ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.
- ஃபிளிப்கார்ட் நிறுவனத்தின் முதன்மை தலைமைச் செயலராக கல்யாண் கிருஷ்ணமூர்த்தி உள்ளார்.
- 2019 ஆம் ஆண்டை “சர்வதேச திணைகள் ஆண்டாக” அறிவிக்க இந்தியா, ஐ.நாவின் உலக உணவு நிறுவனத்திடம் பரிந்துரை செய்துள்ளது.
- புதிதாக இரண்டு விண்வெளி தொழில்நுட்ப ஆராய்ச்சி மையங்களை ஜம்மு மற்றும் அகர்தலாவில் உருவாக்க இருப்பதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.
- இந்தியாவின் மிகவும் தூய்மையான இரயில் நிலையமாக இராஜஸ்தானிலுள்ள ஜோத்பூர் இரயில் நிலையம் அறிவிக்கப்பட்டுள்ளது.

- வடகிழக்கு மாநிலங்களின் முன்னேற்றத்திற்கான “Digital North East Vision 2022” எனும் கொள்கையை மத்திய மின்னணு மற்றும் தகவல் தொடர்பு அமைச்சர் ரவிசங்கர் பிரசாத் அவர்கள் 12.08.2018 அன்று கவுகாத்தியில் வெளியிட்டார்
- ஆகஸ்டு 2018-ல் வெளியிடப்பட்டுள்ள “காற்று தர பட்டியலின்” படி, இந்தியாவிலேயே மிகவும் காற்று மாசுபாடுடைய நகரம் குருகிராமம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
- விக்கிபீடியா இணையதளம் 300 மொழிகளில் தனது சேவையை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.
- தேசிய குழந்தைகள் உரிமைகளை பாதுகாப்பதற்கான கமிஷனின் தலைவராக ஸ்துதி காக்கர் உள்ளார்.
- e-NAM விரிவாக்கம் - e-National Agricultural market
- விவாகரத்து கோருவதற்கான சட்டப்பூர்வ காரணங்களிலிருந்து தொழுநோயை நீக்குவதற்கு வகை செய்யும் சட்டத் திருத்த மசோதா மக்களவையில் 10.08.2018 அன்று நிறைவேற்றப்பட்டது.
- பசு பாதுகாவலர்களுக்கு அடையாள அட்டை வழங்க உத்தரகாண்ட் அரசு முடிவு செய்துள்ளது.
- உத்தரப்பிரதேச மாநிலத்திலுள்ள முக்ஹல்சரை ரயில்வே ஸ்டேஷனின் பெயர், தீன்தயாள் உபாத்யாயா என மாற்றப்பட்டுள்ளது.
- “ஸ்வச்ச மேவ ஜயதே” என்னும் பெயரில் தூய்மை பிரச்சாரத்தை கர்நாடகா அரசு துவங்கியுள்ளது.
- இந்தியாவின் முதல் ‘பிளாக் செயின்’ மாவட்டம் தெலுங்கானா மாநில அரசு மற்றும் டெக் மகேந்திரா நிறுவனத்தின் கூட்டு முயற்சியில் தெலுங்கானாவில் அமையவுள்ளது.
- பெண்கள் ஆரோக்கியத்தைப் பேண உதவும் “wow” செல்லிடப்பேசி செயலி அறிமுகம்
- மத்திய அரசின் “தேசிய உயிரி எரிபொருள் கொள்கையை” முதல் மாநிலமாக ராஜஸ்தான் அமல்படுத்தியுள்ளது.
- வியட்நாம் தலைநகர் ஹனோயில் உள்ள இந்திய தூதரகத்தில் அமைக்கப்பட்டுள்ள மகாத்மா காந்தியின் மார்பளவு சிலையை வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா ஷ்வராஜ் 27.08.2018 அன்று திறந்து வைத்தார்.
- இந்திய மற்றும் மலேசியா நாடுகளின் முதலாவது விமானப்படை கூட்டு இராணுவப்பயிற்சி “HOP Ex RMAF-IAF 2018” எனும் பெயரில் மலேசியாவில் 20 ஆகஸ்டு 2018 அன்று நடைபெற்றது.
- இந்திய கடற்படையின் ஐ.என்.எஸ் கஞ்சார் 18-20 ஆகஸ்டு 2018 தினங்களில் நல்லெண்ண பயணமாக மியான்மர் நாட்டின் யாங்கூன் நகரத்திற்கு சென்றுள்ளது.
- ஐ.நா.சபையின் அடுத்த தலைவர் மரியா ஃபெர்னாண்டா எஸ்பினோசா கார்செஸ்.

- ‘ஏசியான்’(ASEAN) அமைப்பின் 51வது வெளியுறவு அமைச்சர்களின் கூடுகை சிங்கப்பூரில் நடைபெற்றது.
- ரஷியா மீதான பொருளாதார தடையில் இருந்து இந்தியாவுக்கு அமெரிக்கா விலக்கு அளித்துள்ளது. அமெரிக்க நாடாளுமன்ற செனட் சபையில் இதற்கான மசோதா 02.08.2018 அன்று நிறைவேறியது.
- 17வது இந்தியா – அமெரிக்க இராணுவ ஒத்துழைப்பு கூடுகை 2-3 ஆகஸ்டு 2018 தினங்களில் புது தில்லியில் நடைபெற்றது.
- நான்காவது “பிம்ஸ்டெக் கூடுகை” 30-31 ஆகஸ்டு 2018 தினங்களில் நேபாளத்தின் காத்மண்டு நகரில் நடைபெற்றது.
- சார்க் அமைப்பின் முதலாவது, ‘விவசாய கூட்டுறவு வர்த்தக மன்றம்’ நேபாளத்தின் காத்மண்டு நகரில் 28-30 ஆகஸ்டு 2018 தினங்களில் நடைபெற்றது.
- “Bondi bond” என்ற பெயரில் உலகின் முதல் பிளாக் செயின் பொது பத்திரங்களை உலக வங்கி 25.08.2018 அன்று அறிமுகம் செய்துள்ளது.
- ஆஸ்திரேலியாவின் புதிய பிரதமராக ஸ்காட் மோரிசன் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- 24வது உலக தத்துவ காங்கிரஸ் 13-20 ஆகஸ்டு 2018 தினங்களில் சீனாவின் பீஜிங் நகரில் நடைபெறுகிறது
- உலக வாழ்வதற்கு உகந்த நகரங்கள் பட்டியல் - 2018-ல் வியன்னா (ஆஸ்திரியா) நகரம் முதலிடத்திலுள்ளது.
- BBC உலகை மாற்றிய பெண்கள் பட்டியலில் நோபல் பரிசு பெற்ற மேரி கியூரி முதலிடத்தைப் பெற்றுள்ளார்.
- பெப்ஸி கோ நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி (சிஇஓ) பொறுப்பில் இருந்து இந்தியாவைச் சேர்ந்த இந்திரா நூயி (62) விலக இருக்கிறார்.
- உலகின் முதல் ‘அலைஏற்ற கலை கலை காட்சி கூடம் மாலத்தீவு நாட்டில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.
- ஜெர்மன் வளர்ச்சி வங்கியின் மூலமாக “தூய்மை கங்கை திட்டத்திற்காக 120 மில்லியன் யூரோ கடனுதவி வழங்க ஜெர்மனி அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இந்தியாவில் முதல் முறையாக பணப்பரிமாற்றங்களுக்கு ஆதார் வழியாக கருவிழியை ஸ்கேன் செய்து அடையாளம் உறுதிப்படுத்தும் முறையை ஆக்ஸிஸ் வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது.
- 2016-2017 ஆம் நிதி அண்டில் அதிக அளவு வெளி நாட்டிலிருந்து பணம் இந்தியாவிற்கு அனுப்பப்பட்ட நாடுகளின் பட்டியலில் ஐக்கிய அரபு எமிரேட் முதலிடம் பிடித்துள்ளது.
- இந்தி சாகித்ய அகாதமி அமைப்பின் “ஷக்லா சம்மன் 2017-2018” விருது இந்தி திரைப்பட பாடலாசிரியர் ஜாவித் அக்தருக்கு வழங்கப்பட்டுள்ளது.

- விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் ககன்யான் விண்வெளி திட்டத்தின் தலைவராக வி.ஆர்.லலிதாம்பிகா நியமிக்கப்பட்டுள்ளார். இந்த செயற்கைக் கோள் 2022-ம் ஆண்டுக்குள் ஜி.எஸ்.எல்.வி மார்க்-3 ராக்கெட்டின் மூலம் செலுத்தப்படும் எனத் தெரியவருகிறது.
- சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பிரச்சாரத்திற்கு நல்லெண்ண தூதுவராக பாலிவுட் நடிகர் அக்ஷய் குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.
- தேசிய மகளிர் ஆணையத்தின் புதிய தலைவராக ரேகா சர்மா நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- ஃபோர்சூன் பத்திரிக்கையின் 'உலகை மாற்றிய நிறவனங்கள் 2018' பட்டியலில் இந்தியாவின் ரிலையன்ஸ் ஜியோ நிறுவனம் முதலிடத்தைப் பெற்றுள்ளது.
- சுதந்திர போராட்டமும் சுதந்திர போராட்ட வீரர்களும் எனும் தலைப்பில் சிறப்பு திரைப்பட விழா 72 சுதந்திர தினத்தையொட்டி 15 ஆகஸ்ட் 2018 அன்று மும்பையில் நடைபெற்றது.
- உலகின் முதல் பீங்கான் மீது 4D பிரிண்டிங் தொழில்நட்பத்தை ஷாங்காய் பல்கலைக்கழகத்தின் ஆராயச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர்.
- "ஆதித்யா L1" என்ற பெயரில் சூரியனைப் பற்றி ஆராய இந்தியா அனுப்பும் முதல் செயற்கைக்கோள் பி.எஸ்.எல்.வி XL ராக்கெட்டின் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து 2019-2020 காலகட்டத்தில் அனுப்பப்படவுள்ளது.
- 5ஜி தொழில்நுட்பம் பற்றிய பரிந்துரைகளை வழங்க ஏ.ஜெ.பால்ராஜ் குழு அமைக்கப்பட்டுள்ளது.
- இந்தியா-இஸ்ரேல் நாடுகளின் கூட்டு தயாரிப்பில் உருவான 'பாரக் 8' ஏவுகணையை இஸ்ரேல் நாட்டு கடற்படை வாங்கவுள்ளது.
- 'சந்திராயன் -2 திட்டத்தில், சந்திரனில் தரையிறங்கும் விண்கலத்திற்கு இந்திய விண்வெளித் திட்டத்தின் தந்தை எனக் கருதப்படும் விகரம் சாராபாய் அவர்களின் நினைவாக, 'விக்ரம்' எனப் பெயரிடப்படவுள்ளது என இந்திய விண்வெளி ஆய்வு மைய தலைவர் சிவன் தெரிவித்துள்ளார்.
- உலகின் முதல் வெப்பஞ்சார்ந்த மின்கலம் ஆந்திர மாநிலத்தின் அமராவதியில் அமைக்கப்பட்டுள்ளது.
- உலகின் முதல் 'ஒற்றை குரோமோசோம் ஈஸ்ட்' ஐ சீன ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளார்கள்.
- "Scutoid" என்று பெயரிடப்பட்டுள்ள மப்பரிமாண வடிவ மனித செல்லை அமெரிக்க மற்றும் ஸ்பெயின் நாட்டு ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளார்கள்.
- "Gaofen-11" என்று பெயரிடப்பட்ட உயர் திறன் கொண்ட புவி கூர்நோக்கு செயற்கைக்கோளை சீனா வெற்றிகரமாக தனது Long March 4B ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்தியுள்ளது.

- ‘pp’ அல்லது “P null’ வகையிலான மிக அரிய இரத்த வகை மங்களுருவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த P null’ இரத்த வகை இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது இதுவே முதல் முறையாகும்.
- ஜெர்மனியை சேர்ந்த வார்டுவிஸ் என்ற தனியார் மென்பொருள் நிறுவனத்தின் தூதராக இந்திய கிரிக்கெட் வீரர் தோனி நியமிக்கப்பட்டுள்ளார்.
- தெற்காசிய கால்பந்து கூட்டமைப்பு நடத்திய 15 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான கால்பந்து போட்டியில் இந்திய அணி வங்காளதேச அணியை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளது. இந்த விளையாட்டு போட்டிகள் பூடானில் நடைபெற்றது.
- அமெரிக்காவில் நடைபெற்ற உலக பேச்சு சாம்பியன் போட்டியில் இந்திய வம்சாவழியான தமிழ்நாட்டைச் சேர்ந்த டாக்டர் ஹில் கிருஷ்ணன் அரை இறுதியில் 2-வது பரிசு கிடைத்துள்ளது.
- அமெரிக்க பெண்கள் கிரிக்கெட் அணியின் தலைவியாக இந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்ட ஷெபானி மந்தாகினி பாஸ்கர் நியமிக்கப்பட்டுள்ளார்.
- 2018 ஆம் ஆண்டில் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் மிக அதிக ரன்களை எடுத்த கிரிக்கெட் வீரர் எனும் பெருமையை 1404 ரன்களை எடுத்து இந்திய கிரிக்கெட் அணியின் கேப்டன் விராட் கோலி பெற்றுள்ளார்.
- உலக பாட்மிண்டன் சாம்பியன்ஷிப் தொடரில் பி.வி.சிந்து தொடர்ந்து 2-அவது முறையாக வெள்ளிப்பதக்கத்தை வென்றுள்ளார்.
- ஆசியாவின் சின்னமாக இந்திய கால்பந்து கேப்டன் சுனில் சேத்ரி அறிவிப்பு
- “சிவாங்கி பாதக்” எனும் 17 வயது இந்திய பெண் அப்பிரிக்காவின் மிக உயரமான சிகரமான கிளிமாஞ்சாரோவை ஏறி சாதனை படைத்துள்ளார். இவர் சமீபத்தில் “எவரஸ்ட் சிகரத்தின்” உச்சியை எட்டிய மிக இளவயது இந்திய பெண் எனும் சாதனையை படைத்ததால், ‘மலைகளின் கழுகு’ பட்டத்தைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.
- பின்லாந்தில் நடைபெற்ற ‘சாவோ விளையாட்டுகளில்” ஈட்டி எறிதல் போட்டியில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா தங்கம் வென்றுள்ளார்.
- மறைந்த முன்னாள் பிரதமர் வாஜ்பாயை கௌரவிக்கும் வகையில், மத்திய அரசு சார்பில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தொடங்கப்பட உள்ள அறிவியல் தொழில்நுட்ப பயிற்சி ஆய்வகத்திற்கு அடல் டிங்கரிங் என பெயரிட உள்ளது
- மாநிலத்தில் வாழும் யூதர்களுக்கு அண்மையில் மத சிறுபான்மையினரின் தகுதிநிலையை வழங்கியுள்ள மாநில அரசு - குஜராத்.
- முதலாவது இந்திய சுற்றுலா சந்தையை (India Tourism Mart) நடத்தவுள்ள நகரம் - புது டெல்லி
- நிகழாண்டின் மாநில வணிக சீர்திருத்த மதிப்பீட்டின்படி தொழில் தொடங்க எளிதான மாநிலங்கள் தரவரிசையில் ஆந்திர பிரதேசம் முதலிடம் பிடித்துள்ளது.

- உண்ணத்தக்க காட்டு வகை காளானில் புற்றுநோயை எதிர்த்துப் போராட வல்ல ஒரு நிறமியை கண்டறிந்துள்ள இந்தியப் பல்கலைக்கழகம் - கோவா பல்கலைக்கழகம்
- கோட்டா நகரத்தில், ஆளில்லா விமான வாகனங்கள் மற்றும் இலகுரக குண்டு துளைக்காத வாகனங்கள் தயாரிக்கும் இந்தியாவின் முதல் தனியார் துறை தயாரிப்பு தொழிற்சாலை அமையவுள்ளது.
- தகவல் அறியும் உரிமைச்சட்டத்தில் திருத்தம் செய்வதற்காக அமைக்கப்பட்ட குழு - ஸ்ரீகிருஷ்ணா குழு
- பொது நிர்வாகத்தில் நன்னெறிமுறைகளை கடைபிடிப்பது பற்றி தன் பணியாளர்களுக்கு கற்பிப்பதற்காக “சத்யநிஸ்தா” என்ற திட்டத்தை தொடங்கியுள்ள மத்திய அமைச்சகம் ரயில்வே அமைச்சகம் ஆகும்.
- சுதந்திர தினத்தின் போது செங்கோட்டை பாதுகாப்பில் முதன் முறையாக ஸ்வாட் (SWAT) பிரிவைச் சேர்ந்த பெண் கமாண்டோக்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.
- தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலையின், முதல் பெண் துணைவேந்தராக, ஷீலா ஸ்டீபன் நியமிக்கப்பட்டுள்ளார்.
- 2019 ஆம் ஆண்டு குடியரசு தின விழாவில் பங்கேற்க சிறப்பு விருந்தினராக அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப்-க்கு இந்தியா அழைப்பு விடுத்துள்ளது.
- இந்தியாவின் முதல் தொலைபேசி சுற்றுலா வழிகாட்டியும், அலைபெசி செயலியுமான “Go whats that” ஐ அறிமுகப்படுத்தியள்ள நகரம் - சண்டிகர்.
- வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு உதவித்தொகை வழங்கும் “Mukhyamantri Yuva Nestam” என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ள மாநில அரசு ஆந்திரப்பிரதேசம்.
- “Hom Not Ok” என்ற விழிப்புணர்வு பரப்புரையைத் தொடங்கியுள்ள மாநில அரசு ஹிமாச்சலப் பிரதேசம்.
- “ராஷ்மி” என்ற உலகின் முதல் ஹிந்தி பேசும் தத்ரூப எந்திர மனிதனை உருவாக்கியுள்ள இந்தியர் - ரங்சித் ஸ்ரீவஸ்தாவா.
- 22-ஆவது ‘பரம்பரா தொடர் தேசிய இசை மற்றும் நடன விழாவை’ நடத்தவுள்ள நகரம் - புதுதில்லி
- சர்வதேச நீர்வண்ண விழா – 2018 நடைபெறும் இடம் - ராஞ்சி
- கடல்சார் நீரியல் அமைப்பை (Marine Hydraulic System) பெறவுள்ள இந்தியாவின் ஒரே விமானந்தாங்கி போர்க்கப்பல் - INS விக்ரமாதித்யா.
- லக்வர் பல்நோக்குத் திட்டம் யமுனை ஆற்றுடன் தொடர்புடையது.
- நேபாள - இந்திய இலக்கிய விழா – ஆகஸ்டு 12
- உலகின் வெறுமையான விமான நிலையம் - மத்தல ராஜபக்சா

## முக்கிய தினங்கள்

- உலக தாய்ப்பால் வாரம் - ஆகஸ்டு 1 முதல் 7 ஆம் தேதி வரை
- 73வது ஹிரோஷிமா தினம் - ஆகஸ்டு 6
- தேசிய கைத்தறி தினம் - ஆகஸ்டு 7 (7 ஆகஸ்டு 1905-ல் சுதேசி இயக்கம் தவங்கப்பட்ட நாளின் நினைவாக அனுசரிக்கப்படுகிறது)
- சர்வதேச உள்நாட்டு மக்கள் தினம் - ஆகஸ்டு 9
- வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் 76வது ஆண்டு நினைவு தினம் - ஆகஸ்டு 9
- உலக உயிரி எரிபொருள் தினம் - ஆகஸ்டு 10
- தேசிய நூலகர் தினம் - ஆகஸ்டு 12
- சர்வதேச யானைகள் தினம் - ஆகஸ்டு 12
- உலக மனிதாபிமான தினம் -ஆகஸ்டு 19
- உலக புகைப்பட தினம் - ஆகஸ்டு 19
- தேசிய பிறர் நலனுக்கான தினம் - ஆகஸ்டு 20 (மறைந்த முன்னாள் பிரதமர் இராஜீவ் காந்தி அவர்களின் பிறந்த தினம்)
- தேசிய ஊட்டச்சத்து மாதம் - செப்டம்பர் 2018: இனிவரும் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதத்தை தேசிய ஊட்டச்சத்து வாரமாக அனுசரிக்க மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் அறிவித்துள்ளது.
- உலக கொசு தினம் - ஆகஸ்டு 20
- பயங்கரவாதத்தினால் பாதிப்புள்ளானோருக்கான சர்வதேச நினைவு மற்றும் அஞ்சலி தினம் - ஆகஸ்டு 21
- உலக மூத்த குடிமக்கள் தினம் - ஆகஸ்டு 21
- சர்வதேச அடிமை வியாபார ஒழிப்பு மற்றும் நினைவுகூருதல் தினம் - ஆகஸ்டு 23
- அணு சோதனைகளுக்கெதிரான சர்வதேச தினம் - ஆகஸ்டு 29
- தேசிய விளையாட்டு தினம் - ஆகஸ்டு 29
- சட்ட அமலாக்கத்துறைசார் ஆள் கடத்தலினால் பாதிப்புக்குள்ளோருக்கான சர்வதேச தினம் - ஆகஸ்டு 30
- தேசிய மொபிலிட்டி வாரமாக 31 ஆகஸ்டு 2018 முதல் 6 செப்டம்பர் 2018 தினங்களை அனுசரிப்பதாக நிதி அயோக் அறிவித்துள்ளது.